# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.37 /2015**

திரு. வீ. துரைக்கண்,
த/பெ அ. வீரணன்,
கூத்தியார்குண்டு,
மதுரை– 8 ........மேல் முறையீட்டாளர்
(திரு. வீ. துரைக்கண்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர்,
மதுரை– 625 007. ......... எதிர்மனுதாரர்
(திரு. K.முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர் /கப்பலூர் )

**கேட்புரை நாள்: 12–8–2015**

**ஆணை நாள் : 9–9–2015**

1. திரு. வீ. துரைக்கண், த/பெ அ. வீரணன், கூத்தியார்குண்டு மதுரை அவர்களின் நாளிடப்படாத மனு மேல்முறையீட்டு மனு எண்.37/2015 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 12.8.2015 அன்றுநடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை</u>

மேல்முறையீட்டாளர் மின்துண்டிப்பு செய்யப்பட்டுள்ள அவரது விவசாய மின் இணைப்பு எண்.121இன் நிலுவைத்தொகை ரூ.16412/–ஐ செலுத்த தயாராக உள்ளதாகவும் எனவே, மீண்டும் அந்த மின்இணைப்பை அவருக்கு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. <u>வழக்கின் சுருக்கம்</u>

2.1 மேல்முறையீட்டாளர் திருப்பரங்குன்றம், தாலுகா, நிலையூர் 1வது பிட்டில் உள்ள நிலத்திற்கு விவசாய மின் இணைப்பை பெற்று உபயோகித்து வந்தார். அந்த மின் இணைப்பின் புதிய எண்.144–009–121ஆகும்.

2.2 மேற்கண்ட மின் இணைப்பு 22.11.80 முதல் மின் துண்டிப்பிலுள்ளது. 3.6.1981ல் மேற்கண்ட மின் இணைப்பில் மின் திருட்டு நடைபெற்றதால் ஏற்பட்ட மின் இழப்பீட்டு நிலுவைத்தொகையை நுகர்வோர் செலுத்தவில்லை. எனவே, மின்இணைப்பு மின்துண்டிப்பில் உள்ளது.

2.3 மேற்கண்ட மின்இணைப்பின் நிலுவைத்தொகையான ரூ.16412/–ஐ மேல்முறையீட்டாளர் செலுத்த தயாராக உள்ளதாகவும் எனவே, மின்இணைப்பை மீண்டும் வழங்கவேண்டும் என்று மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.4 மன்றம், அவரின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று அவரின் மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. மேற்கண்ட ஆணையில் திருப்தியில்லாததால் மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 13.1.2015 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“6.1 முறையீட்டாளர் எதிர்மனுதாரரின் வாதங்கள் மற்றும் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலித்ததின் அடிப்படையில் முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பில் (எண்.121) மின்*

*திருட்டு நடந்ததை உறுதி செய்தும், ஆனால் அந்த மின்திருட்டிற்கும், முறையீட்டாளருக்கும் சம்பந்தம் ஏதும் இல்லையென்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.CRL.RC.No.**311/1985,** CRL R.P.No.**308/1985** மீதான தீர்ப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

***6.2*** *எனவே, வாரிய விதிமுறைகளின்படி மின் இழப்பீட்டு நிலுவைத்தொகை ரூ.**16,412/–**னை **15** தினங்களுக்குள் செலுத்தினால் மட்டுமே மறு மின்இணைப்பு வழங்க இயலும் என்று உதவி மின்பொறியாளர்/ஊரகம்/திருப்பரங்குன்றம் அவர்களின் **26.8.2002** தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்தும் முறையீட்டாளர் உரிய காலக்கெடுவுக்குள் பணம் செலுத்த தவறியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.*

***6.3*** *மேலும், துண்டிக்கப்பட்ட விவசாய மின்இணைப்பை மீண்டும் மறு மின் இணைப்பு வழங்குவதற்கான தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணை வழிகாட்டுதல்.*

*"22. Restoration of supply of electricity :*

*(6)(i) When a service connection remains disconnected for non payment of electricity charges beyond the notice period of three months, if the consumer comes forward within the period mentioned below to pay the actual dues and agrees to remit the charges in clause (ii) below, the official authorized by the Licensee may grant extension of time beyond the notice period and revoke the termination of agreement provided that the lines feeding the service connection have not been dismantled, so as to facilitate reconnection of the disconnected service.*

| *Category* | *Period for reconnection of disconnected service* |
|---|---|
| *HT consumers* | *Within five years from the date of Disconnection* |
| *LT Agricultural consumers* | *- Do -* |
| *Other LT consumers* | *Within two years from the date of Disconnection* |

என்ற விதியின்படி 22 ஆண்டுகள் கழித்து மறு மின்இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளார் என்பதால் மின் இணைப்பு வழங்க இயலாது என்று இம்மன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**4. <u>தாமதத்திற்கு மன்னிப்பு</u>**

**4.1** மன்றத்தின் **13.1.2015** நாளிட்ட ஆணையின் நகல் **26.2.2015** அன்றுதான் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி எண்.**8**இன்படி மேல்முறையீட்டாளர்

தன்னுடைய மேல்முறையீட்டை மன்றத்தின் ஆணையின் நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பிக்கவேண்டும். ஆனால், மேற்கண்ட மேல்முறையீட்டு மனு மின்குறைதீர்ப்பாளரின் அலுவலகத்தில் 17.4.2015 அன்றுதான் பெறப்பட்டுள்ளது. எனவே, மனு 19 நாள் தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர் அவருடைய வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்யவேண்டியதால் கால தாமதம் ஆகிவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

4.2 மேல்முறையீட்டாளர் தாமதமாக மேல்முறையீட்டை செய்வதற்கு தெரிவிக்கப்படும் காரணம் ஏற்புடையதாக இருப்பின் மின்குறைதீர்ப்பாளர் மன்றத்தின் தீர்வு வழங்கப்பட்டு 30 நாட்களுக்குள் பிறகு சமர்ப்பிக்கபடும் மேல்முறையீடுகளையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று மன்ற விதி8இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.3 இந்த மேல்முறையீட்டாளர் தாமதமாக மேல்முறையீடு செய்வதற்கு தெரிவித்த காரணம் ஏற்புடையதாக உள்ளதால் மேல்முறையீட்டாளரின் தாமதம் மன்னிக்கப்பட்டு மேல்முறையீட்டு மனு மின்குறைதீர்ப்பாளரால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

5. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>

5.1 அவருக்கு சொந்தமான நிலத்தில் கிணறு வெட்டி சர்வீஸ் எண்.121இன் மூலம் மின்னிணைப்பு பெற்று விவசாயம் செய்து வந்தார்.

5.2 இந்நிலையில் அந்த விவசாய நிலத்தை அவர் உறவினர் ஒருவரிடம் ஒப்படைத்திருந்தார். அப்போது 3.6.81 அன்று மின் திருட்டு நடந்துள்ளது என அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. 19.9.84 அன்றைய தீர்ப்புரையில் அவருக்குச் சாதகமாக தீர்ப்புரை வழங்கியதால் மின்வாரியம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து வழக்கு நடைபெற்றது. 13.2.92 அன்று வழங்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் அவருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

5.3 24.6.2002 அன்று மறு மின்இணைப்பு கோரி மனு செய்தார். உதவி பொறியாளர்/ஊரகம் திருப்பரங்குன்றம் மின் இழப்பீட்டுக்குண்டான தொகை 16,412/—ஐ உடனே கட்டும்படி கடிதம் அனுப்பினார்.

5.4 அவரின் வறுமையின் காரணத்தால் அவரால் பணம் கட்ட முடியவில்லை. தற்போது அவர் பிள்ளைகள் மேஜராகிவிட்டதால் வெளியில் வேலை பார்த்து பணம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே அவர் மின்வாரியத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையை ஆணை கிடைத்தவுடன் செலுத்தத் தயாராக உள்ளார். அவர் இதுவரை டீசல் வாங்கி விவசாயம் செய்ததை தண்டனையாக கருதி அவர் மீது இரக்கப்பட்டு மறு மின்இணைப்பு வழங்குமாறு மின்வாரியத்தை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறார்.

5.5 அவர் விளை நிலத்தில் வெட்டியுள்ள கிணற்றிற்கு வரும் மின்சார இணைப்பு அகற்றப்படாமல் உள்ளது. ஆகவே மின் வாரியத்திற்கு எவ்விதச் செலவும் கிடையாது. ஆன்லைன் கரண்ட் இருப்பதால் அவருக்கு மின்இணைப்பு கொடுக்குமாறு வேண்டுகிறார்.

**6. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>**

6.1 திரு. வீ. துரைக்கண், கூத்தியார்குண்டு அவர்களுக்கு மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தாலுகா, நிலையூர் 1வது பிட்டில் உள்ள நிலத்திற்கு உதவி மின் பொறியாளர்/ஊரகம்/ திருப்பரங்குன்றம் மின் பிரிவிற்குட்பட்டு விவசாய மின் இணைப்பானது (மி.இ.எண்.144–009–121) வழங்கப்பட்டு மேற்கண்ட நிலத்தில் மனுதாரரின் உறவினர்களால் விவசாயம் செய்யப்பட்டு வந்த நிலையில் கடந்த 3.6.1981 அன்று இம்மின்னிணைப்பில் மின் திருட்டுநடைபெற்றதனால் ஏற்பட்ட மின் இழப்பீட்டிற்கான நிலுவை தெகையினை செலுத்தத் தவறியதால் இன்று வரை மின் துண்டிப்புசெய்யப்பட்டுள்ளதை திரும்ப வழங்கக் கோரி 29.11.2014 அன்று மதுரை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுவிற்கு (பதிவு எண்.029/2014), விவசாய மின் துண்டிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் மீண்டும் மறு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தால் மட்டுமே விவசாய மின் இணைப்பு வழங்க இயலும் என்பதனால் மனுதாரர் திரு. துரைக்கண் கூத்தியார்குண்டு அவர்களுக்கு மின் துண்டிப்பு செய்யப்பட்ட விவசாய மின் இணைப்பை (மிஇஎண்.144–009–121) மீண்டும் திரும்ப வழங்க இயலாது என ஏற்கனவே மதுரை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 13.1.2015 அன்று தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதத்தை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 12.8.2015 அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு. வீ. துரைக்கண் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. K.முத்துராமலிங்கம், உதவி செயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

8. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரையின்பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 உயர்நீதிமன்றம் அவருக்கு சாதகமாக தீர்வு அளித்துள்ளதால் அவர் மின் வாரியத்திற்கு பணம்எதுவும் செலுத்த வேண்டியது இல்லை என்று வாதிட்டார். அதற்கு ஆதாரமாக மெட்ராஸ் உயர்நீதிமன்றம்மற்றும் மதுரை முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்வின் நகல்களை சமர்ப்பித்துள்ளார்.

8.3 மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின்கட்டண நிலுவையான ரூ.354.40ஐ 7.6.1993லும் மற்றும் ரூ.500/–ஐ 15.6.1993லும் செலுத்தியுள்ளார். அவர் மின்வாரியத்திற்கு சட்டபடி கட்டவேண்டிய நிலுவை தொகை எதுவும் இல்லை என்றும் வாதிட்டார்.

8.4 அவரின் மின்கட்டண நிலுவை எதுவும் இல்லாததால் மேற்படி விவசாய மினஇணைப்பை மீண்டும் இணைக்க வேண்டும் என்று பலமுறை மின்சார வாரிய பிரிவு அலுவலகத்தை நேரில் அணுகி கோரிக்கை விடுத்தும் மின்இணைப்பு துண்டிப்பில்தான் உள்ளது என்றும் தெரிவித்தார்.

8.5 அவரின் மின்இணைப்பிற்கான மின்பாதை இன்றும் உள்ளது என்றும், எனவே, மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றும் வாதுரை புரிந்தார்.

8.6 உதவி மின் பொறியாளரின் 26.8.2002 கடிதத்திற்கு முன்பு அவர் மின்வாரியத்திற்கு கட்டணம் செலுத்த வேண்டியது உள்ளது என்று எந்த அறிவிப்பும் கொடுக்கப்படவில்லை என்றும் 24.5.2002ல் அவர் மின் இணைப்பை மீண்டும் வழங்க வேண்டும் என்று கோரிய மனுவிற்கு பதில் அளிக்கும்பொழுதுதான் மேற்கண்ட தகவல் அவருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாதுரை புரிந்தார்.

**9. <u>எதிர்மனுதாரரின் சார்பில் கலந்துகொண்ட உதவி செயற்பொறியாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

9.1 திரு. K.முத்துராமலிங்கம் உதவி செயற்பொறியாளர்/கப்பலூர் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

9.2 உதவி செயற்பொறியாளர் மின் இணைப்பு .22.11.80 முதல் மின் துண்டிப்பிலுள்ளது என்றும் அந்த மின் இணைப்பில் 3.6.1981 அன்று துண்டிக்கப்பட்ட மின்இணைப்பை தவறான முறையில் இணைத்து பம்பு செட்டை இயக்கி உள்ளதால் மின் திருட்டு அந்த மின் இணைப்பில் நடந்துள்ளது என்றும்,அது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு வழக்கு எண் CC43/83 முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் எண்.1, மதுரையின் 19.9.84 நாளிட்ட தீர்வில் முறையீட்டாளர் குற்றவாளி அல்ல என்று தீர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த தீர்வை எதிர்த்து வாரியம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.Crl.RC No.311/1985 மற்றும் Crl.RP No.308/1985, 13.2.92 நாளிட்ட தீர்வின்படி மின்திருட்டு சம்பந்தமான குற்றவியல் தண்டனையிலிருந்து மட்டுமே விடுவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மின்திருட்டு நடைபெறவில்லை என்றோ முறையீட்டாளர் இழப்பீட்டு தொகையை செலுத்த வேண்டாம் என்றோ தெரிவிக்கவில்லை என்று வாதிட்டார்.

9.3 மின் இணைப்பு மின்கட்டணம் செலுத்தாமல் 22.11.80 முதல் மின் துண்டிப்பில் உள்ளதால் தமிழ்நாடு மன்சார வழங்கல் விதி 22(6)இன்படி விவசாய மின் இணைப்புகள் மின் துண்டிப்பு செய்யப்பட்டு 5 வருடங்களுக்குள் மறு மின் இணைப்பு கோரினால் மட்டுமே மீண்டும் மின் இணைப்பு வழங்க முடியும் என்பதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஏற்க

தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் மேற்கண்ட விதியின்படி முடியாது என்றும் வாதிட்டார்.

**10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>**

**10.1** மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் இருதரப்பினராலும் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) மின்துண்டிப்பிலுள்ள ஒரு விவசாய மின்இணைப்பு மறு இணைப்பு பெறவேண்டும் எனில் தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் என்ன ?

(ii) இந்த மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மேற்கண்ட விதிகளுக்கு இணங்க உள்ளதா ?

**11. <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**11.1** மின்துண்டிப்பிலுள்ள மின்இணைப்புகளுக்கு மறு மின் இணைப்பு வேண்டுமெனில் என்னவிதிகளை பின்பற்ற வேண்டும் என்று தெரிந்து கொள்ள நாம் தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி22(7)ஐ நாம் ஆராய வேண்டும். அந்த விதி கீழே *கொடுக்கப்பட்டுள்ளது.*

*"22. Restoration of supply of electricity*
*(1) xxx xxx xxx*
*(2) xxx xxx xxx*
*(3) xxx xxx xxx*
*(4) xxx xxx xxx*
*(5) xxx xxx xxx*
*(6) xxx xxx xxx*
*(7) If the consumers of the disconnected service come forward for reconnection after the period mentioned in sub regulation (6) (i), the licensee shall treat them as new applicants and supply effected after recovering all charges applicable to a new service connection and all other arrears with BPSC "*

**11.2** மேற்கண்ட விதியின் துணைப்பிரிவு 7ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது மின் துண்டிப்பிலிருக்கும் மின்னிணைப்பின் நுகர்வோர்கள் துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து துணைபிரிவு **(6)(i)**ல் சொல்லப்பட்டுள்ள காலத்திற்குப் பிறகு மீண்டும் மின் இணைப்பு கோரினால் (Reconnection) உரிமம்தாரர் அந்த விண்ணப்பத்தை புதிய மின் இணைப்பு கோரும் விண்ணப்பமாக கருதி, புதிய மின் இணைப்புக்கான அனைத்து கட்டணங்களும் மற்றும் அனைத்து நிலுவை தொகைகளையும் தாமத செலுத்த உபரிக் கட்டணத்தையும் (BPSC) சேர்த்து பெற்ற பின்பே மின் இணைப்பை தரவேண்டும் என்று அறிய முடிகிறது.

**11.3** இதில் துணைப்பிரிவு**(6)(i)**ல் குறிப்பிடப்பட்டுள்ள காலங்களுக்கு பின்பு மறு மின் இணைப்பு கோரப்பட்டால் அந்த நுகர்வோர் புதிய விண்ணப்பதாரராகத்தான் எடுத்துக் கொள்ளப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **22**இன் துணைப்பிரிவு **(6)(i)** மற்றும் **(6)(ii)** கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"22. Restoration of supply of electricity :*
*xxx xxx xxx xxx xxx xxx*
*(6)(i) When a service connection remains disconnected for non payment of electricity charges beyond the notice period of three months, if the consumer comes forward within the period mentioned below to pay the actual dues and agrees to remit the charges in clause (ii) below, the official authorized by the Licensee may grant extension of time beyond the notice period and revoke the termination of agreement provided that the lines feeding the service connection have not been dismantled, so as to facilitate reconnection of the disconnected service.*

| *Category* | *Period for reconnection of disconnected service* |
|---|---|
| *HT consumers* | *Within five years from the date of Disconnection* |
| *LT Agricultural consumers* | *- Do -* |
| *Other LT consumers* | *Within two years from the date of Disconnection* |

*(ii) In accordance with sub-regulation (4), the authorized Officer of the Licensee may permit such consumer to pay the outstanding in instalments and to avail reconnection on receipt of 40% of the total arrears outstanding after closing of account due to the licensee, which include –*

*(a) Arrears on the date of disconnection*

*(b) Tariff minimum and meter rent for the period of six months from the date of disconnection (including the notice period)*

*(c) The applicable BPSC / interest upto the date of payment.*

*(d) The balance 60% of the amount shall be collected in ten monthly instalments.*

*(e) In addition to the above, the full amount of Security Deposit adjusted while closing of account shall be collected in one lumpsum before effecting new service connection.*

*Explanation: For the purpose of removal of doubts, it is hereby declared that any tariff minimum collected by the Tamil Nadu Electricity Board prior to the date of publication of the Tamil Nadu Electricity Supply (Amendment) Code, 2006 in the Tamil Nadu Government Gazette, that is to say prior to 21st June 2006 on the basis of sub-regulation (6) as it stood before the said amendment need not be refunded by the Tamil Nadu Electricity Board.*

*xxxx xxxx xxxx*

**11.4** மேற்கண்ட விதி22(6)(i)ல் உள்ள அட்டவணையின்படி விவசாய மின் நுகர்வோர்கள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட 5 வருடங்களுக்குள் மறு மின் இணைப்பு கேட்டு மனு செய்யவேண்டும் என்றும் மற்றும் விதி22(6)(ii)ல் கூறியுள்ள கட்டணங்களை செலுத்தவேண்டும் என்றும் மேலும், அந்த மறு மின் இணைப்பு கோரும் விவசாய மின் இணைப்பிற்கு மின்சாரம் தரும் மின்பாதை பிரிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்று தெரிகிறது.

**11.5** தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி22(6)(i) மற்றும் 22(7)ஐயும் சேர்த்து படிக்கும்பொழுது நாம் அறிவது மின் துண்டிப்பிலுள்ள ஒரு விவசாய மின்இணைப்பிற்கு மறு மின் இணைப்பு(Reconnection)வழங்க வேண்டுமெனில் துண்டிக்கப்பட்ட விவசாய மின் இணைப்பிற்கு மின்சாரம் தரும் மின்தொடர் பிரிக்கப்படாமல் இருக்கவேண்டும், மேலும், மின்இணைப்பின் சொந்தக்காரர் விதி22(6)(ii) கூறியுள்ள கட்டணங்களை செலுத்த சம்மதிக்கவேண்டும் மற்றும் மேற்கண்ட மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் மறு மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் செய்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து ஐந்து வருடங்கள் கழிந்த பிறகு மறு மின் இணைப்பு கோரினால் அந்த விண்ணப்பம் புதிய மின் இணைப்பு கோரும் விண்ணப்பமாக கருதப்பட்டு புதிய இணைப்புக்கான அனைத்து கட்டணங்களும் மற்றும் அனைத்து நிலுவைத்தொகையும் அதற்குரிய தாமத உபரிக்கட்டணத்தையும் (BPSC) சேர்த்து செலுத்திய பின்புதான் அதனுடைய முன்னுரிமைப்படி பெறமுடியும் என்று தெரிகிறது.

12. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>

12.1 இந்த மேல்முறையீட்டாளர் முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் எண்.1, மதுரையிலும், மெட்ராஸ் உயர்நீதிமன்றத்திலும் அவர் குற்றவாளி அல்ல என்று அவருக்கு சாதகமான தீர்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இழப்பீட்டுத்தொகை எதுவும் அவர் செலுத்த வேண்டியது இல்லை என்று வாதாடியுள்ளார்.

12.2 இருந்தபோதிலும் தற்பொழுது அவர் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டியத்தொகையை செலுத்த தயாராக உள்ளார் என்றும், அவருக்கு மறு மின் இணைப்பு (Reconnection) வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

12.3 மேலும்,அவரின் மின் இணைப்பிற்கு உண்டான மின்பாதை இன்றும் அகற்றப்படாமல் உள்ளது என்றும் தெரிவித்து வாரியத்திற்கு மறு மின் இணைப்பு வழங்குவதால் செலவு எதுவும் இல்லை என்றும் வாதிட்டுள்ளார்.

12.4 எதிர்மனுதாரர் மதுரை முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் எண்.1இன் தீர்விலும் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் தீர்விலும் மேல்முறையீட்டாளர் மின்திருட்டிற்கான குற்றவியல் தண்டனையிலிருந்து மட்டுமே விடுவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மின்திருட்டு நடைபெறவில்லை என்றோ இழப்பீட்டுத்தொகை செலுத்தவேண்டாம் என்றோ குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்து, இழப்பீட்டுத்தொகையை மின் இணைப்பின் உரிமையாளர் செலுத்த கடமைப்பட்டவர் என்று வாதிட்டுள்ளார்.

12.5 மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி 22(6)((i)இன்படி விவசாய மின்இணைப்பு துண்டிப்பு செய்த நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் விண்ணப்பித்தால் மட்டுமே மறு மின் இணைப்பு வழங்க வழிவகைஉள்ளதால் மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு 22 வருடங்கள் கழித்து நிலுவைத்தெகையை செலுத்துகிறேன், மறு மின் இணைப்பு கொடுங்கள் என்று கோருவது விதிகளின்படி ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டார்.

12.6 இந்த மேல்முறையீட்டாளர் நீதிமன்ற உத்தரவு அவருக்கு சாதகமாக வந்துள்ளதால் அவர் இழப்பீட்டு தொகை எதுவும் செலுத்த வேண்டியது இல்லை என்று வாதிடுவதால்

மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் எண்.1 ஆகியவற்றின் தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றம் எண்.1, மதுரை குற்ற வழக்கு பட்டிகை எண்.43/83ல் 19.2.1984 நாளிட்ட தீர்ப்பு

*xxx xxx xxxx*

*1) இ.4 காவல்நிலைய ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவு **379** அத்துடன் இந்தியன் எலக்ட்ரிசிட்டி ஆக்ட்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். **3.6.81**ம் தேதி கருவேலம்பட்டி கிராமத்தில் எதிரிக்கு சொந்தமான மின் இணைப்பு எண்.**121**ல் **22.11.80**ல் இருந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் **3.6.81** அன்று லைன்மேன் சோதனை செய்ததில் திருட்டுத்தனமாக **4632** யூனிட் எலட்ரிக் கரண்டை திருடி பயன்படுத்தியதாகவும் அதனால் ரூ.**4914** எலக்ட்ரிக்சிட்டி போர்டுக்கு நஷ்டம் விளைவித்தாகவும் கூறப்பட்டுள்ளது.*

*xxxx xxxx xxxx*
*xxxx xxxx xxxx*

*6) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் –*

*எதிரி இதச பிரிவு **379**, உடன் **39** இந்தியன் எலக்ட்ரிக்சிட்டி ஆக்டின்படி குற்றவாளியா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும் ?*

*7) இந்த வழக்கில் வாதிதரப்பில் மொத்தம் 7 சாட்சிகளும் எதிரி தரப்பில் 2 சாட்சிகளும் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். எதிரிக்குச் சொந்தமான மின்சார பம்ப் மோட்டார் எஸ்சி எண்.**121**ல் **22.11.80** ம் தேதி துண்டிப்பு பின்பு **3.6.81**ம் தேதி மின்வாரிய அதிகாரிகள் பார்வையிட்ட போது மோட்டார் ஓடிக்கொண்டிருந்தது என்றும் மின்சாரம் திருடப்பட்டு இருந்தது என்றும் மீட்டர் வயர்கள் மாற்றி அமைக்கப்பட்டு மின்சாரம் திருடப்பட்டு இருந்தது என்றும் வாதி தரப்பில் கூறப்பட்டது.*

*8. இந்த விஷயங்கள் வாதிதரப்பின் சாட்சிகளின் சாட்சியங்களின்படியும் சான்றாவணம், சான்றுப் பொருட்களின்படியும் நிரூபிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை பார்க்கவேண்டும். வாதிதரப்பின் சாட்சிகள் தங்களுடைய சாட்சியத்தின் முலமும், சான்றாணங்களின் மூலம் **22.11.80**ம் தேதி மேற்படி மின்இணைப்பு பணம் கட்டாத காரணத்தினால் துண்டிக்கப்பட்டு இருந்தது என்பதையும் பின்பு **3.6.81**ம் தேதி மேற்படி இடத்தை பார்வையிட அங்கு பம்ப் ஓடிக்கொண்டு இருந்தது என்றும், மின்சார மீட்டரில் கணக்கு காட்டப்படாமல் புதிய முறையில் திருடப்பட்டு இருந்தது என்பதையும் தெளிவுபடுத்துகிறது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புகைப்படங்களும் இதை தெளிவுப்படுத்துகிறது.*

*9. ஆனால், மேற்படி மின்சாரம் திருடப்பட்டதற்கு எதிரி காரணமா என்பதை பார்க்கவேண்டும். வா.சா./6 தன்னுடைய குறுக்கு விசாரணையில் எதிரிக்கும் அவர் குடும்பத்துக்கும் சம்பவ சமயத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் பிரச்சினைகள் இருந்தது என்பது இப்போது தனக்கு தெரிய வந்தது என்று கூறியிருக்கிறார். எதிரிதரப்பில் விசாரிக்கப்பட்ட எதிரி தரப்பு முதல் சாட்சி1980 வருடத்தில் இருந்து எதிரியானவர் தன் வீட்டில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றும், அவருக்கும் அவருடைய மனைவிக்கும் மனத்தாங்கள் ஏற்பட்டு எல்லா சொத்துக்களையும் அவருடைய மனைவி, மகளிடம் ஒப்படைத்துவிட்டதாகவும் கூறியிருக்கிறார். இதே கூற்றை எ.த.சா.2ம் கூறியிருக்கிறார். வாதிதரப்பு சாட்சிகளும் சம்பவ சமயம் எதிரியின் தாயாரும் எதிரியின் இளைய மகனும் சம்பவ இடத்தில் இருந்ததாக கூறியிருக்கிறார்கள். சம்பவ சமயம் எதிரி அவர் இருந்ததாக கூட சாட்சிகள் கூறவில்லை. இவற்றைக் காணும்போது மின்சாரம் திருடப்பட்டதற்கு எதிரி தான் காரணமாக இருந்து இருப்பார் என்பதை ஏற்க முடியவில்லை. எதிரியின் 2வது மகன் மோட்டாரை இயக்கினார் என்று எதிரியின் மனைவி சொன்னதாக சாட்சிகள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, எதிரி அந்த மோட்டாரை இயக்கினார் என்பதற்கு போதுமான சாட்சியங்கள் எதுவும் இல்லை. சம்பவ சமயம் எதிரி தன் குடும்பம் சொத்து ஆகியவற்றை விட்டு இருந்திருக்கிறார். ஆகவே வாதி தரப்பினர் எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றத்தை சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்க தவறிவிட்டார்கள் என்று தீர்மானிக்கிறேன். ஆகவே, எதிரி இதச பிரிவு 379ன்படியும் மின்வாரியச் சட்டம் 39ன்படியும் குற்றவாளி அல்ல என குவிமுச 248(1)படி விடுதலை செய்கிறேன்."*

<u>மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் வழக்கு எண்.Crl RC No.311 of 1985 மற்றும் Crl. RP No.380 of 1985 13.2.1992 நாளிட்ட ஆணை</u>

*2.xxx xxx xxx*

*........The trial court found that there is theft of electricity energy but the prosecution failed to prove that the accused has committed the offence of theft. Therefore, the lower court has acquitted the accused under both the charges.*

*3. xxxx xxxxx xxxx*

*.......... It is true that the offence of theft has been proved, but there is no evidence that the accused committed the theft. In such circumstances, the lower court is justified in acquitting the acused. I am unable to see any illegality in the judgment of*

*the lower court and i therefore, confirm the judgment ofthe lower court and the revision is dismissed."*

**12.7** மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மின்திருட்டு நடந்துள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், குற்றச் சாட்டப்பட்டவர் மேற்கண்ட திருட்டிற்கு காரணம் என்பதற்கு ஆதாரமில்லை என்ற கீழ்மை நீதிமன்றத்தின் தீர்வு சரிதான் என்று தெரிவித்துள்ளது. எனவே, மேல்முறையீட்டாளர் criminal குற்றத்தில் இருந்துதான் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால், மின் திருட்டிற்கான இழப்பீட்டுத்தொகை தள்ளுபடி செய்யப்படவில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

**12.8** மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்.**121**, **22.11.1980**லிருந்து மின் துண்டிப்பிலுள்ளதாலும் அவர் செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையை செலுத்தி மின்துண்டிப்பு செய்யப்பட்ட ஐந்து வருடங்களுக்குள் மீண்டும் மறு மின் இணைப்பு வேண்டும் என்று கோராமல் காலங்கடந்து **24.5.2002**ல் தான் அதாவது சுமார் **21 ½** ஆண்டுகள் கழித்து மறு மின் இணைப்பு கோருவது தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பின் விதி **22(6)(i)**இன்படி ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்கிறேன்.

**13.** <u>**முடிவுரை**</u>

**13.1** மேற்கண்ட பத்தி எண் **12.8**ல் உள்ள தீர்வின்படி மதுரை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மின்குறைதீர்ப்பாளரால் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**13.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.**37/2015** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. வீ. துரைக்கண்,
த/பெ அ. வீரணன்,
கூத்தியார்குண்டு,
மதுரை– **8**

2) மேற்பார்வை பொறியாளர்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர்,
மதுரை– 625 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே.புதூர், மதுரை– 625 007.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.